2013 ஏப்ரல் 30]

அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டு, இங்கு வருவதற்கு முன்பே, அரசின் சார்பில் ஏறக்குறைய 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையின் சார்பில் டெண்டர் கோரப்பட்டு, டெண்டர் அனுமதிக்கப்பட்டு, விரைவிலே பணிகள் துவங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலங்களிலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொகுதிகளில் எல்லாம் பணிகள் நடைபெறாது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் கேள்வி கேட்பவர் தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என்றாலும்கூட, ஒரு தாய் அனைத்து குழந்தைகளையும் சமமாக பார்க்கிறார் என்பதற்கு உதாரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பொன்மனத் தாய் அவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொகுதிகளுக்கும் பணிகளைச் செய்திருக்கிறார் என்பதற்கு இதுவே மிகப் பெரிய உதாரணம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 359, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**359—**

## பட்டு ஜவுளிப் பூங்கா

***4188—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணியில் பட்டு ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆரணி பகுதியில் பட்டு ஜவுளிப் பூங்கா அமைக்க அப்பகுதியிலுள்ள தொழில் முனைவோர் முன்வரும்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே 70,000 மக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பாரம்பரியமான பட்டுத் தொழில் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கைத்தறி மற்றும் powerloom என்று சொல்லக்கூடிய விசைத்தறியும் அங்கு பெருமளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தத் தொழிலை மேம்படுத்தும் விதமாகவும், அங்கு இருக்கக்கூடிய தொழில் முனைவோர்களுக்கு, அரசின் மூலமாக அங்கே ஜவுளிப் பூங்கா அமைத்துத் தருகின்றபட்சத்திலே அந்தத் தொழில் மென்மேலும் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே, அரசு அதை மறுபரிசீலனை செய்து, பட்டு ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு ஆவன செய்யுமா? அதேநேரத்தில் மத்திய அரசு வழங்கக்கூடிய 40 சதவிகிதம் மானியத்தோடு, மாநில அரசு வழங்கக்கூடிய 9 சதவிகித மானியத்தோடு, அங்கே தொழில் முனைவோர்கள் 51 சதவிகித அளவிற்கு பணத்தை முதலீடு செய்து, தொழில் தொடங்குவதற்கு வசதியானவர்கள் இல்லை. எனவே, தமிழக அரசு வழங்கக்கூடிய மானியத்தைக் கூடுதலாக்கி, அங்கே ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர் என்பது

2013 ஏப்ரல் 30]

நன்றாகத் தெரியும். சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்பதை அவர் இங்கு எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றார். மத்திய அரசின் 40 விழுக்காடு மானியமும் இருக்கிறது. மாநில அரசின் 9 விழுக்காடு மானியமும் இருக்கிறது. ஆகவே, அந்த மானியத்தைப் பயன்படுத்தி, தொழில் முனைவோர்கள் தங்கள் பங்குத் தொகையாக 51 விழுக்காடு செலுத்துகின்றபொழுதுதான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். ஆகவே, அங்கே வேலைவாய்ப்பு கொடுக்கின்ற வகையில், கைத்தறி ஏற்றுமதித் தொழிலுக்கும், இங்கே இருக்கின்ற சிறப்பு வாய்ந்த ஆரணிப் பட்டினை எல்லா மக்களும் பயன்படுத்துகின்ற வகையிலும் செயல்படுவதற்கு தொழில் முனைவோர் முன்வருகின்றபோது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை இங்கே கூறிக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் காஞ்சிபுரத்தில் கீழ்கதிர்ப்பூர் என்ற இடத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் ஏற்கெனவே தமிழகத்தில் ஒரு பட்டுப் பூங்கா அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 7.54 கோடி ரூபாயை மானியமாகவும், நீண்ட காலக் கடனாக 6.23 கோடி ரூபாயையும் கொடுத்து, அந்தப் பட்டுப் பூங்கா அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசிற்கு மத்திய அரசு 12 ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதற்கு அனுமதி அளித்திருக்கின்றது. அதிலே 2 ஜவுளிப் பூங்காக்கள் ஏற்கெனவே தமிழகத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆரணியிலே அமைக்க வேண்டுமென்ற காரணத்தைக் கருத்திலே கொண்டு நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்ததன்பேரிலே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு ஏற்பாடு செய்து, அங்கிருக்கக்கூடிய வியாபாரிகளை

எல்லாம் அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார். அதிலே ஒத்த கருத்து எட்டப்படவில்லை. ஏனென்று சொன்னால், 51 விழுக்காடு முதலீடு செய்வதற்கு அங்கே பெரிய வணிகர்கள் இல்லை. எனவே, அரசு மறுபரிசீலனை செய்து சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்கின்ற அடிப்படையிலே ஜவுளித் தொழிலாளர்களுக்குக் கூடுதலாக ஏதாவது சலுகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கையாக வைத்து இதைப் பரிசீலித்து ஆரணியிலே ஒரு ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லா தொழிலாளர்களும் தங்கள் தொழில்களை செய்வதற்காக வீடுகளை விட்டு தொழிற்சாலைகளுக்குச் செல்வார்கள். ஆனால், நெசவாளர்கள் மட்டும் நூல்களை வாங்கிக் கொண்டு தங்களுடைய இல்லங்களிலிருந்து தொழில் செய்கின்றார்கள். ஆரணி, வந்தவாசி, செய்யாறு போன்ற பகுதிகளைச் சுற்றி 20,000 கைத்தறி நெசவாளர்கள் இருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், துறை அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தி அதனடிப்படையில் ஏற்றுமதி சார்ந்த தொழில் தொடங்குவதற்குத்தான் கைத்தறி பூங்காக்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. வீட்டிலிருந்தே செய்கின்ற தொழில்களைச் செய்து வருவதால் அநேக நெசவாளர்கள் தொழிற்சாலைகளுக்கு வந்து வேலை செய்வதற்குத் தயாராக இல்லை. அதுமட்டுமல்ல; திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிகமான நெசவாளர்கள் தனியாரிடம் அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே வராமல், தனியார் மூலமாக சென்னையிலுள்ள தனியார் நிறுவனங்களுக்கு பட்டு உற்பத்தியைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். கூட்டுறவு முறையில் இருக்கின்ற 6 கூட்டுறவுச் சங்கங்களில்தான் கிட்டத்தட்ட 5,325 நபர்கள் கூட்டுறவு அமைப்பில் இருக்கின்றார்கள். நல்ல உலகத் தரம் வாய்ந்த ஆரணிப் பட்டு மக்கள் மத்தியில் விரும்பி வாங்கக்கூடிய அளவிற்கு இருப்பதால், அவர்கள் தனியாரிடம் சென்று கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு அமைப்புகளின்மூலம் அவர்கள் வராத காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

2013 ஏப்ரல் 30]

அவர்கள் கூட்டுறவு அமைப்புகளின்மூலம் நெசவாளர்களுக்குப் பல்வேறு திட்டங்களைக் கொடுத்தும்கூட, அந்தத் திட்டத்தைப் பெறுவதற்காக நெசவாளர்கள் வராத சூழ்நிலை இருக்கின்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர், துறை சார்ந்த அதிகாரிகளை அங்கே அழைத்து இங்கே ஏற்றுமதி சார்ந்த பூங்காக்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறினாலும்கூட, யாருமே முன்வருவதில்லை. அந்தத் தொழில் முனைவோர் முன்வருகின்றபோது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அந்த நெசவாளர்களுக்கு அங்கே ஏற்றுமதி சார்ந்த ஜவுளிப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு, ஜவுளிப் பூங்கா அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றது. இந்த ஆண்டுகூட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்காக 36 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நெசவாளர்களிடம் பேசி தொழில் முனைவோரை அழைத்து வந்து அரசுக்கு தெரிவிக்கின்றபோது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆரணி பகுதியில் தொழில் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தை இந்த நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சார்பாக கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 360, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**360—**

**சுற்றுலாத் தலம்**

***9921—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மருது சகோதரர்களின் சங்கரபதி கோட்டையைப் புதுப்பித்து அப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?